2018 ஜூலை 3]

(இ) அரசு உறுதிமொழிக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசு உறுதிமொழிக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ராஜா, அரசு உறுதிமொழிக் குழுவின் தலைவர் அவர்கள்.

திரு. சி. ராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகிறேன். அருந்ததியர், ஆதி திராவிட மக்களுக்கு அரசுமூலம் கட்டப்பட்ட பழுதடைந்த சுமார் 43 ஆயிரம் வீடுகளைப் புதுப்பித்துத் தர ஆணையிட்ட மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதல்வர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அனைத்து சமுதாய பெருந்தலைவர்களையும் பெருமைப்படுத்தும் வகையிலே, வன்னிய சமூகத்தின் பெருந்தலைவர், இந்திய சுதந்திரப் போராட்ட வீரர், தமிழக முன்னாள் அமைச்சர் பெருந்தகை திரு. எஸ்.எஸ். ராமசாமி படையாச்சியார் அவர்களின் பிறந்த நாளான செப்டம்பர் 16-ஐ, அரசு விழாவாகக் கொண்டாட ஆணை வழங்கிய வன்னிய சமூகத்தினரின் பாதுகாவலர், எனது அரசியல் ஆசான் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதல்வர் அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2016-2018 ஆம் ஆண்டிற்கான அரசு உறுதிமொழிக் குழுவின் 31 முதல் 34 வரையிலான 4 அறிக்கைகளை குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன். நன்றி.

5. சிறப்புக் கவன ஈர்ப்பு—தொடர்ச்சி

திண்டுக்கல் மாவட்டத்தில் நிலவும் குடிநீர்ப் பிரச்சினை—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒரு நிமிடம் இருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன், என்ன சொல்லுங்கள்?

***திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சபையின் நேரத்தைக் கட்டுப்படுத்தி, விரைவாகப் பணிகளை முடிக்க வேண்டும் என்பதற்காக தாங்கள் எடுக்கின்ற நடவடிக்கைகளுக்கு என்னுடைய பாராட்டுகள்; நான் ஒத்துழைக்கிறேன். ஆனால், ஒன்றை தங்களிடம் தெரிந்துகொள்ள வேண்டுமென்று விரும்புகிறேன். குடிதண்ணீர்ப் பிரச்சினை ஏற்பட்டு மக்கள் அவதிப்படுகிறார்கள் என்பதற்காக பேசுகின்றபோது, அவருடைய பேச்சைக்கூட incomplete ஆக cut short செய்துவிட்டீர்கள். ஆனால், ஓர் அறிக்கையை அளிக்கின்றபோது, இந்த அறிக்கையை அளிக்கிறேன் என்று சொல்லலாம். அவருடைய தலைவரைப் புகழ்வதில் பிரச்சினை ஒன்றும் இல்லை. அதற்காக அறிக்கையை அளிக்கும்போதுகூட நீண்ட நெடிய வசனங்களைப் பேசுவதற்கு நேரத்தைக் கொடுக்கிறீர்களே! குடிதண்ணீருக்காக மக்கள் அவதிப்படுகிறார்கள் என்று கேட்பவர்களுக்கு மட்டும் நேரம் தர மாட்டேன் என்கிறீர்களே, இது என்ன நியாயம்?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, நீங்கள் என்னைப் பாராட்டுவது மாதிரி (குறுக்கீடு) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் பெரியசாமி அவர்கள் முழு விவரத்தையும் தெரிவித்துவிட்டார். அவருடைய தொகுதியில், அவருடைய மாவட்டத்தில் என்னென்ன பிரச்சினை, என்னென்ன குடியிருப்புப் பிரச்சினைகள் இருக்கின்றன என்ற முழு விவரத்தையும் அவர் தெரிவித்துவிட்டார். அதற்குத் தேவையான பதிலையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லிவிட்டார்கள். ஆகவே, மீண்டும் மீண்டும் அதையே சொல்லிக் கொண்டிருந்த காரணத்தினால்தான், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள், அவரை இடைமறித்து அமரச் சொன்னாரேயொழிய, அவருடைய பேச்சை இடைமறிக்கவில்லை என்பதைத் தங்கள் வாயிலாக எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்குத் தெரியாது என்று நினைக்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களை நான் வற்புறுத்தி கவன ஈர்ப்பை எடுத்துக்கொள்ளச் சொன்னது மாண்புமிகு உறுப்பினருக்கு நன்றாகத் தெரியும். அந்த அளவிற்கு அவருக்கு முக்கியத்துவம் கொடுத்துதான் அந்த வாய்ப்பை நான் கொடுத்தேன். இன்னும்

சொல்ல வேண்டுமென்றால், அவர் பேசுகின்ற அளவிற்கு, சாதாரணமாகக் கேட்கின்ற கேள்விக்கு, மேற்கொண்டும் அவர் பேசுவதற்கு, குடிநீர்ப் பிரச்சினை என்பதால்தான் முழுமையாக நான் அனுமதித்தேன். அதற்குப் பிறகும் அவர் அதிக நேரம் எடுத்துக் கொண்டதால் வேறு வழியில்லை. மாண்புமிகு உறுப்பினர்கள் சாதாரணமாக ஓர் அறிக்கையைப் படிக்கின்றபோது, அவர்களுடைய தலைவர்களை வாழ்த்திப் பேசுவதை என்னால் தடுக்க முடியாது. மேலும், பேரவைத் தலைவரை கட்டுப்படுத்துவது போன்று மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் சொல்வது சரியாக இருக்காது. (குறுக்கீடு) இல்லை, நீங்கள் என்னைப் பாராட்டினீர்கள். ஆனால், அவரைக் கட்டுப்படுத்த வேண்டும் என்று நீங்கள் என்னைக் குறை கூறுவது மாதிரிதான் சொன்னீர்கள். ஆகவே, அதுமாதிரி பேரவைத் தலைவரை தாங்கள் விமர்சனம் செய்ய மாட்டீர்கள் என்று நான் நினைக்கிறேன். அவ்வளவுதான். மேற்கொண்டு இந்த மாதிரியான நடவடிக்கைகளில் மாண்புமிகு உறுப்பினர்கள் கவனமாக இருக்கும்படி அனைவரையும் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-10

8. மானியக் கோரிக்கைகள், 2018-2019, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*

(அ) கோரிக்கை எண் 25 - இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்-நிருவாகம் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)

(ஆ) கோரிக்கை எண் 48 - போக்குவரத்துத் துறை

— — —

(அ) கோரிக்கை எண் 25 - இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்-நிருவாகம் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2018-2019 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 25-இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்-நிருவாகம் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை). மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*